ஆனந்தவிகடனில் 07 Sep 2022 அன்று வந்தக் கதை

ராஜேஷ்குமார் தன்னுடன் படிக்கும் பிள்ளைகளிடம் அந்த வட்டமான கறுப்புக்கல்லைக் காட்டினான். அந்தக் கல்லை தன் அப்பா கொண்டு வந்து தனக்குக் கொடுத்ததாகச் சொன்னான். அந்தக் கல்லை இரண்டாகப் பிய்த்துத் திரும்பவும் ஒட்ட வைக்கலாம். நான்காக மடித்து பாக்கெட்டில் வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னான். அவனுடன் படிக்கும் பிள்ளைகள் யஹதா ககாமி என்ற பெயரைச் சொல்ல முடியாமல் அக்கா கக்கா என்று சொல்லிக் கேலி செய்தனர். ராஜேஷ்குமார் இதற்கு முன்பு இதுபோல நிறைய பொருள்களைப் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டு வந்திருக்கிறான். லிட்டில் ரோஸ் பேனா, காந்தித் தாத்தா கோட் அணிந்த கலர்ப் படம், எம்.ஜி.ஆர் தொப்பியிலிருந்த வெள்ளை நூல், பேப்பர் முட்டைக்கோஸ் என்று ஏகப்பட்ட பொருள்களைக் கொண்டு வந்து தன்னுடன் படிக்கும் மாணவ மாணவிகளுக்குக் காட்டுவான். அவன் கொண்டு வந்த லிட்டில் ரோஸ் பேனாவைப் பார்த்துவிட்டு அவனுடன் படிக்கும் வரலெட்சுமி தனக்கும் அதேமாதிரி பேனா வேண்டுமென்று அழுதாள். பள்ளிக்கூடம் முடிந்து வீட்டுக்குச் சென்றவள் அதற்குப் பிறகு பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை.

லிட்டில் ரோஸ் பேனாவை வைத்து எது எழுதினாலும் என்ன கிறுக்கினாலும் ரோஜாப்பூப் படம் வரையும்படி அந்தப் பேனாவைச் செய்திருக் கிறார்கள். அந்தப் பேனாவை பம்பாயிலிருந்து கொண்டு வந்ததாக ராஜேஷ்குமார் சொன்னான். அது ஐந்து கலர் அமுக்குலெட்டு பேனா. பச்சை, கறுப்பு, சிவப்பு, நீலம் ரோஸ் என்று எந்தக் கலரில் எழுதினாலும் ரோஜாப்பூப் படம் வரைந்துவிடும். அந்தப் பேனாவைக் கொண்டு வந்த அன்றே அவன் தொலைத்து விட்டான். யார் திருடி னார்கள் என்று தெரியவில்லை.
பள்ளிக்கூடம் முழுக்கத் தேடினான். கண்டுபிடிக்க முடியவில்லை. அழுது கொண்டே வீட்டுக்குச் சென்றான். கடைசியாக அவனிடமிருந்து பேனாவை அம்பிகா வாங்கி எழுதினாள். அதற்குப் பிறகு யாரும் வாங்கவில்லை. அவளிடமிருந்து திரும்பவும் வாங்குவதற்குள் கடைசி மணி அடித்துவிட்டார்கள். அம்பிகாவிடம் கேட்டதற்கு பேனாவைத் தந்துவிட்டேன் என்று சொன்னாள். லிட்டில் ரோஸ் பேனாவை அம்பிகா எடுத்து வைத்திருப்பாள் என்கிற சந்தேகம் அவனுக்கு இருந்தது. அதற்குப் பிறகு நீண்ட நாள்களாகப் பள்ளிக்கூடத்திற்கு எந்தப் பொருளையும் அவன் கொண்டு வருவதில்லை. இப்போது யஹதா ககாமியைக் கொண்டு வந்திருக்கிறான்.

ராஜேஷ்குமாரிடமிருந்து யஹதா ககாமியை பால்பாண்டி வாங்கிப் பார்த்தான். ஜில்லென்றிருந்தது. கறுப்பு கலர் ஐஸ் என்று ஆசையாகக் கடித்தான். அவனுக்குப் பற்கள் கூசின. கன்னங்களில் வைத்தான். சிறிது

நேரத்தில் உடம்பு குளிரால் நடுங்கியதும் பயந்துபோனான். அவனுக்குப் பக்கத்தில் அமர்ந்திருக்கும் கமலக்கண்ணனிடம் கொடுத்துவிட்டான். கமலக்கண்ணன் அவனைத் தொட்டுப் பார்த்தான். கல்லைத் தொட்டுப் பார்த்தான். சூடாக இருந்தது.

ராஜேஷ்குமார், “ஐஸ்ஸுன்னு நெனச்சுக் கடிச்சா இதுமாதிரி சில்லுன்னு இருக்கும். பல்லு கூசும். மூணு நா பல் கூச்சம் போகாது. ஒரு நாளு முழுக்க உடம்பு ஐஸ் கடையில நின்னது மாதிரி இருக்கும்” என்று சொன்னான். கமலக்கண்ணன் அவன் சொல்வதை நம்பவில்லை. ராஜேஷ்குமார் பொய் சொல்கிறான் என்று அவனுக்குத் தெரியும். பால்பாண்டியிடமிருந்து கல்லை வாங்கியதும் கையில் தினுசாக வைத்துக் கொண்டான். எதாவது பொய் சொல்லி, கல்லை வைத்து விளையாட வேண்டுமென நினைத்தான். என்ன பொய் சொன்னால் நம்புவார்கள் என்று யோசித்தான். அவனுடைய மனதில் எதுவும் தோன்றவில்லை. யோசிப்பதற்குள் அம்பிகா அவனிடமிருந்த கல்லைப் பிடுங்கினாள்.

அம்பிகா வட்டக் கல்லை இரண்டாகப் பிய்த்தாள். சிலேட் குச்சியை ஒடிப்பதுபோன்ற சத்தம் கேட்டது டக்கென்று. இரண்டு துண்டுகளைக் கையில் வைத்திருந்தவள் அவற்றைத் தட்டாங்கல் விளையாடுவது போல் தூக்கிப் போட்டு விளையாடத் தொடங்கினாள். அம்பிகாவுடன் பாண்டியம்மாவும் சேர்ந்துகொண்டாள். இனி அவர்களிடமிருந்து யஹதா ககாமியை வாங்க முடியாது. சிறிது நேரம் இருவரும் தன்னை அழ வைத்து, பிறகு தந்துவிடுவார்கள் என்று நினைத்தான் ராஜேஷ்குமார்.

இதற்கு முன்னால் அவர்கள் இருவரும் இப்படிச் செய்திருக்கிறார்கள். காந்தித் தாத்தா கோட் அணிந்திருந்த கலர் போட்டோவை அம்பிகாவும் பாண்டியம்மாவும் அவனிடமிருந்து பிடுங்கிக்கொண்டார்கள். இரண்டு மூன்று தடவை கெஞ்சினான். மதியம் உணவு வரை தராமல் அவனை அழ வைத்த பிறகு, “இந்தாடா” என்று கொடுத்துவிட்டார்கள். மீசை வைத்த காந்தித் தாத்தா அந்தப் படத்தில் சிரிக்காமல் கோபமாக இருப்பதாக அம்பிகா சொன்னாள். அதிலிருந்து அவர்களுக்கு எதையும் அவன் காட்டுவதில்லை.

ராஜேஷ்குமார் தன்னுடைய இடத்திலிருந்து எழுந்து அம்பிகாவுக்கு எதிரே உட்கார்ந்தான். அம்பிகாவுக்குப் பள்ளிக்கூடத்தில் குளுதாளி என்று பெயர் வைத்திருந்தனர். ஆனால் தெருவில் புளிச்சதண்ணி என்று பெயர். அவள் வீட்டிற்குப் பின்னால் மூன்று பசுமாடுகள் இருந்தன. அங்கு பெரிய குளுதாளி இருந்தது. அந்தத் தெருவிலிருந்தவர்கள் காலையில் பழைய சோற்றைக் குளுதாளியில் கொட்டுவார்கள்.சிறிது நேரத்தில் அந்தத் தெரு

முழுக்க புளிப்புவாசனையாக இருக்கும். அவளுக்கு, இந்தக் கறுப்புக் கல்லை வீட்டுக்கு எடுத்துக் கொண்டுபோய் குளுதாளியில் போட்டுவிடவேண்டுமென்று தோன்றியது.அப்படிப் போட்டுவிட்டால் புளிப்பு வாசனை வராது என்று நினைத்தாள். ராஜேஷ்குமாரிடமிருந்து இந்தக் கல்லை எடுத்துக் கொண்டு போய்விடவேண்டும். அதற்குப் பதிலாக வேறு எதாவது பொருளைக் கொடுத்து அவனை ஏமாற்றிவிடலாம் என தனக்கு முன்னால் அமர்ந்திருப்பவனைப் பார்த்துச் சிரித்தாள்.

அவள், “எங்க வீட்டிலயும் இதுமாதிரி கல்லு ஒன்னு இருந்துச்சுடா. முந்தியிருந்துச்சு. எங்க தாத்தா வெச்சிருந்தாரு. இப்ப இல்ல” என்று கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு வருத்தமாகச் சொன்னாள்.

ராஜேஷ்குமார் அவள் சொல்வதைக் கேட்டுக்கொண்டான். டீச்சர் வருவதற்குள் அவளிடமிருந்து வாங்கிவிட வேண்டுமென்கிற அவசரத்தில் இருந்தான். அவனுக்கு முகமெல்லாம் வியர்த்தது. முதல் மணி அடித்துவிட்டார்கள். இரண்டாவது மணி அடித்ததும் டீச்சர் வகுப்புக்குள் வந்துவிடுவார்கள்.

“இந்தக் கல்லுக்குப் பேரு என்னாடா?” பாண்டியம்மா அவனிடம் கேட்டாள்.

அவன் “யஹதா ககாமி”என்று சொன்னான்.அதைக் கேட்டதும் அவனைச் சுற்றியிருந்தவர்கள் சிரித்தார்கள்.

“சிரிக்காதீங்கடா. மூணு நாளா நோட்டுல எழுதி வெச்சு ஒவ்வொரு எழுத்தா மனப்பாடம் செஞ்சேன் தெரியுமா...”

“எதுக்குடா இந்தப் பேரு. இந்தப் பேருக்கு என்னாடா அர்த்தம்” என்று அம்பிகா கேட்டாள்.அவனுக்குச் சொல்லத் தெரியவில்லை.

“யாருடா உனக்குக் கொடுத்தாங்க?”

“எங்கப்பாவுக்கு சாமியாரு கொடுத்திருக்காரு.அந்த சாமியாரு மரத்துக்கடியில படுத்திருந்தாராம். அப்ப பாத்து இந்தக் கல்லு அந்த மரத்திலிருந்து அவரு வவுத்தில விழுந்துச்சாம். அத எங்கப்பாவுக்குக் கொடுத்துட்டாரு” என்று சொன்னான்.

“ஆமா மரத்தில தொங்குச்சாம். ஓம்மூஞ்சியில தொங்குது. போடா” என்று பாண்டியம்மா அவனை அடித்துவிடுவதுபோல் அரட்டவும் அவன் பயந்துபோனான். பாண்டியம்மா இரண்டாவது தடவையாக ஆறாவது படிக்கிறாள்.முதல் தடவை பாதியில் நின்றுவிட்டாள். பிறகு இந்த வருடம்

பள்ளிக்கூடத்தில் சேர்ந்திருக்கிறாள்.அவளுடன் படிக்கும் பிள்ளைகளைவிட உயரமாகவும் குண்டாகவும் இருந்ததால் மற்ற பிள்ளைகள் அவளைப் பார்த்து பயந்தார்கள்.டீச்சர் பள்ளிக்கூடத்திற்குத் தாமதமாக வரும் பிள்ளைகளையும் வீட்டுப்பாடம் எழுதாதவர்களையும், கொடிக் காசு கொண்டு வராதவர்களையும் தலையில் கொட்டுவதற்குப் பாண்டியம்மாவை லீடராக வைத்திருந்தார்.

ராஜேஷ்குமார், “என்னய யாரும் நம்பமாட்டீங்கன்னு தெரியும். பரவாயில்ல. அந்தக் கல்லத் தா” என்று அழாதகுறையாகக் கேட்டான்.

அம்பிகா அவனிடம் ஒரு கல்லை மட்டும் கொடுத்துவிட்டு “இந்தக் கல்ல நா வெச்சுக்கிறேன்டா. அதுக்குப் பதிலா உனக்கு வேற எதாச்சும் தர்றேன்டா” என்று கெஞ்சினாள்.

“அதெல்லாம் முடியாது. எனக்கு ஏங்கல்லு வேணும்” என்று அழத் தொடங்கினான். அவன் அழ ஆரம்பித்தால் நிறுத்தமாட்டான் என்று அம்பிகாவுக்குத் தெரியும். அவனை சமாதானப்படுத்துவதற்காகப் பொய் சொன்னாள்.

“ஏங்கிட்ட ரோஸ்மில்க் இருக்கு”

“அதெல்லாம் வேணாம். எனக்கு ஏங்கல்லத் தா” என்று எழுந்து டவுசர் அவிழ்ந்துவிடுவது போல குதிக்க ஆரம்பித்தான்.

“சரி சரி அழாத, இந்தா ஒங்கல்லு” என்று பாண்டியம்மா அவனிடம் தந்தாள். கல்லை வாங்கிக்கொண்டாலும் அவனுக்கு அழுகை தீரவில்லை.

பிரேயர் மணி அடிப்பதற்கும் டீச்சர் வகுப்புக்குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது.பிரேயர் ஆரம்பமானது. ராஜேஷ்குமார் அழுகையை அடக்கிக்கொண்டு தமிழ்த்தாய் வாழ்த்து பாட ஆரம்பித்தான். கடைசிவரியை தேம்பித் தேம்பிப் பாடி முடித்தான். டீச்சர் நாற்காலியில் உட்கார்ந்து கண்ணாடியை வெல்வெட் துணியால் துடைத்தபடி வகுப்பைப் பார்வையிட்டார். வகுப்பில் அமர்ந்திருக்கும் பிள்ளைகளில் யார் யார் என்னென்ன தவறு செய்திருக்கிறார்கள், யார் யாரை அடித்து அழ வைத்திருக்கிறார்கள், வீட்டுப்பாடம் எழுதியவர்கள், எழுதாதவர்கள், பிரேயரின் போது முன்னாலிருந்தவனின் மண்டையில் அடித்தவன், சட்டையில் மை தெளித்தவன் என்று எல்லா விசயத்தையும் கண்டுபிடித்துவிடுவார். அந்தக் கண்ணாடிதான் டீச்சருக்கு எல்லாவற்றையும் காட்டிக் கொடுக்கிறது. இல்லையென்றால் இதெல்லாம் எப்படி டீச்சருக்குத் தெரியும் என்று பிள்ளைகளுக்குக்

குழப்பமாக இருந்தது.டீச்சர் வருகைப்பதிவேடு புத்தகத்திலிருந்த பெயர்களை வாசிக்க ஆரம்பித்தார். பிறகு பாடம் நடத்தத் தொடங்கினார்.

அவனுக்குப் பாடத்தின் மேல் கவனம் செல்லவில்லை. கடைசி வரிசையில் அமர்ந்திருந்த பிள்ளைகள் பலரும் தூங்கினார்கள். டீச்சர் பாடத்தை நடத்தியபடி 'ஏய் கவனி', 'ஏய் கவனி' என்று பிரம்பை மேஜையில் தட்டிச் சொல்லும்போது அவர்கள் தூக்கத்திலிருந்து உலுக்கிவிழுந்து கண்முழித்துக்கொள்வார்கள். ராஜேஷ்குமார், ரீசஸ் மணிக்காகக் காத்திருந்தான்.

திடீரென டீச்சர் பாடம் நடத்துவதை நிறுத்தினார். பால்பாண்டியை எழுப்பி திருக்குறளை ஒப்பிக்கச் சொன்னார்.அப்போதுதான் ரோஜஷ்குமாருக்கு டீச்சர் தமிழ் வகுப்பு எடுக்கிறார், திருக்குறள் பாடம் நடத்துகிறார் என்று தெரியவந்தது. பால்பாண்டி முதல்வரியைச் சொல்லி முடிப்பதற்குள் டீச்சர் அவனை உட்காரச் சொல்லிவிட்டு அவனுக்குப் பக்கத்திலிருந்தவனை எழுப்பி அடுத்த திருக்குறளை ஒப்பிக்கச் சொன்னார். ராஜேஷ்குமாருக்கு நெஞ்சு திடுக்திடுக்கென்று அடித்துக்கொண்டது. தனக்கு எந்தக் குறள் வருமென்று கணக்குப் போட்டுப் பார்த்தான்.ஆனால் டீச்சர் மாணவிகள் பக்கமாக நின்று வரிசையாகக் கேட்க ஆரம்பித்தார்.

முதல் வரிசையில் முதலாவதாக அமர்ந்திருந்த தேவகியை எழுப்பி, குறளைச் சொல்லச் சொன்னார்.அவளுக்கும் அம்பிகாவுக்கும் படிப்பில் போட்டியாக இருக்கும். அவர்கள் இருவரும் பேசமாட்டார்கள்.தேவகி குறளை நிறுத்தி நிறுத்தி அழகாக ஒப்பித்தாள்.டீச்சர் கேட்காமலேயே கடகடவென்று மூன்று குறள்களை ஒப்பித்தாள். டீச்சர் அவளை முறைத்துப் பார்த்துவிட்டு, "நா உன்னய ஒரு குறளுதான ஒப்பிக்கச் சொன்னேன். நீ எதுக்கு மூணு குறளு சொல்லுற. முந்திரிக்கொட்ட" என்று திட்டியதும் அம்பிகாவுக்கு சந்தோஷமாக இருந்தது.

தேவகிக்கு அருகில் அமர்ந்திருந்த பிள்ளைகள் பயந்தபடி ஒரு குறளை மட்டும் திக்கித்திணறி ஒப்பித்தனர். பாண்டியம்மா முறை வரும்போது அவள் குறளை ஒப்பிக்காமல், "டீச்சர் இந்த சேலை உங்களுக்கு சூப்பரா இருக்கு டீச்சர்" என்று சொன்னாள்.

டீச்சர், "சரி, சரி, உட்காந்து தொலை. அடுத்து யாரு, நீ சொல்லு" என்றதும் பாண்டியம்மா உட்கார்ந்துகொண்டாள். பாண்டியம்மாவுக்கு அருகிலிருந்தவள் எழுந்தவுடன் அழ ஆரம்பித்தாள். "டீச்சர், எனக்கு வவுறு வலிக்குது டீச்சர்" என்றதும் டீச்சர், "கடைசியில போய் உட்காரு சனியனே.எருமை மாடு. அடுத்து யாரு, நீ சொல்லு" என்று அம்பிகாவை

எழுப்பினார். அம்பிகா கடகடவென மூன்று குறள்களை ஒப்பித்தாள். டீச்சர் ‘வெரிகுட்’ என்று சொல்லி நாற்காலிக்குச் சென்று அமர்ந்தார்கள்.டீச்சர் அதற்குப் பிறகு பிள்ளைகள் குறளை ஒப்பிக்கச் சொல்லிக் கேட்கவில்லை. சேலையை இழுத்துக் கட்டுவதிலும் முந்தியை முன்னுக்குக் கொண்டு வந்து மடித்துச் செருகுவதிலும் கவனமாக இருந்தார்.

தேவகி அம்பிகாவை முறைத்துப் பார்த்தாள்.அவளுக்கு டீச்சரைப் பிடிக்கவில்லை. தனக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த மும்தாஜ்பேகத்திடம், “ச்சே, டீச்சரு இவ்வளவு மோசமானவங்களா இருப்பாங்கன்னு நெனைக்கவே இல்லடீ. முந்தியெல்லாம் நான் ஒப்பிக்க ஆரம்பிச்சா, ‘நீ நல்லா நிறுத்தி அழகா சொல்லுற’ன்னு பக்கத்தில நின்னு கேட்டுட்டு இருப்பாங்க. இப்ப அப்படியே மாறிட்டாங்க. அம்பிகாவுக்குப் பக்கத்தில நின்னுக்குறாங்க. அவ எது சொன்னாலும் வெரிகுட்டு வெரிகுட்டுன்னு சொல்லுறாங்கடீ” என்று முனங்கினாள். டீச்சர் மேஜையில் பிரம்பைத் தட்டி “அமைதியா இருங்க” என்று அதட்டினார். அதற்குப் பிறகு வகுப்பில் யாரும் பேசவில்லை. டீச்சர் பாடமும் நடத்தவில்லை.

ராஜேஷ்குமாருக்கு ரீசஸ் மணி அடித்ததும் உயிர் வந்தது. அவன் வட்டக்கல்லை பத்திரமாக வைத்திருந்தான். யார் கேட்டாலும் தரக்கூடாது என்று முடிவு செய்திருந்தான். பால்பாண்டியும் கமலக்கண்ணனும் கேட்டதற்குக்கூடத் தரவில்லை.அந்தக் கோபத்தில் கமலக்கண்ணன் அவனிடமிருந்த கல்லைப் பிடுங்கிக்கொண்டு வெளியே ஓடப் பார்த்தான். அவர்கள் இருவரையும் டீச்சர் பார்த்துவிட்டார். “இங்க வாங்க ரெண்டு பேரும், எருமை மாடுங்களா” என்று அரட்டவும் கமலக்கண்ணனும் ராஜேஷ்குமாரும் டீச்சர் அருகே சென்று நின்றனர். மேஜையில் பிரம்பைத் தட்டும் போது ராஜேஷுக்கு சிறுநீர் முட்டிக்கொண்டு வந்தது. டீச்சருக்குப் பக்கத்தில் சென்றவுடன் சிறுநீர் வந்து டவுசர் நனைந்தது. இரண்டு கால்களையும் கெட்டியாகப் பின்னிக்கொண்டு நின்றான்.

டீச்சர், “மொதல்ல நேரா நில்லு எருமை மாடு” என்று பிரம்பில் மேஜையைத் தட்டிச் சொல்லவும் பயந்துபோனான். டீச்சர் நாற்காலியை விட்டு எழுந்து முன்னால் வந்து நின்றார். ராஜேஷ்குமாரின் கையிலிருந்த வட்டக் கறுப்புக் கல்லைப் பார்த்ததும் டீச்சரின் கோபமான முகம் உடனே மாறியது. டீச்சர் சிரிப்பதை அன்றுதான் பார்த்தான் ராஜேஷ்குமார்.டீச்சரின் பற்கள் வெள்ளையாகவும் வரிசையாகவும் இருக்கிறதைப் பார்த்தவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

டீச்சர், “ஏதுடா இந்தக் கல்லு, யாருடா உனக்குக் கொடுத்தாங்க” என்று அவன் பக்கத்தில் நின்று கேட்டார். ராஜேஷ்குமார் சொல்லி முடிப்பதற்குள் அந்தக் கல்லை வாங்கிக்கொண்டு வேகமாக நடந்தார். டீச்சர் வகுப்புக்கு

வெளியே சென்று சுற்றி முற்றிலும் பார்த்தார். கல்லின் மேல் வெயில் விழுவதுமாதிரியான இடத்தில் நின்றுகொண்டார்.வகுப்பின் வாசலில் நின்ற ராஜேஷ்குமாரிடம் “கல்லப் பாருடா, கல்லப் பாருடா” என்று கத்தினார்.டீச்சரின் சத்தத்தைக் கேட்டு பக்கத்து வகுப்பிலிருந்த பிள்ளைகள் எட்டிப் பார்த்தார்கள். வாசலிலும் வராண்டாவிலும் நின்றிருந்த பிள்ளைகள் கல்லைப் பார்த்தார்கள். கல்லில் அவர்களது முகம் தெரிந்தது.அவர்களுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை.சந்தோஷத்தில் ஹோவெனக் கத்தினார்கள். அவர்கள் கத்திய சத்தத்தில் பள்ளிக்கூடத்தின் கட்டடம் மேலெழுந்து பறப்பது போலிருந்தது.

அந்தக் கல்லில் தன்னுடைய முகம் தெரிவதைப் பார்த்த ராஜேஷ்குமாருக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை. அங்கிருந்த பிள்ளைகள் நெருக்கியடித்துக்கொண்டு கல்லைப் பார்த்தனர். அம்பிகாவும் பாண்டியம்மாவும் ஒன்றாக நின்று கல்லைப் பார்த்தார்கள். அம்பிகா பார்த்தபோது அவளது முகம் தெரிந்தது. பாண்டியம்மாளின் முகம் தெரியவில்லை. பாண்டியம்மா கல்லைப் பார்த்தபோது அவளது முகம் தெரிந்தது. அம்பிகாவின் முகம் தெரியவில்லை. இருவரும் மாறி மாறி எட்டிப் பார்த்தார்கள். ஒருவர் முகம் மட்டும்தான் கல்லில் தெரிந்தது.

ரீசஸ் முடிந்து மணி அடித்தார்கள்.பிள்ளைகள் வகுப்புக்குள் சென்றனர். டீச்சர் அந்தக் கல்லை ராஜேஷ்குமாரிடம் கொடுத்து வெயிலில் நிற்கச் சொன்னார். அவனும் டீச்சர் சொன்ன இடத்தில் நின்றான். டீச்சர் அந்தக் கல்லைப் பார்த்தார். டீச்சரின் முகம் தெரியவில்லை. வேறொரு இடத்தில் நிற்க வைத்து முகம் பார்த்தார். அப்போதும் தெரியவில்லை. திரும்பவும் இன்னொரு இடத்தில் வெயில் நன்கு கல்லின் மேல் விழும்படி நிற்க வைத்துப் பார்த்தார்.தெரியவே இல்லை. டீச்சரின் கண்களில் கண்ணீர் துளித்துளியாகத் திரண்டு கீழ் இமையடியில் நிற்பதை ராஜேஷ்குமார் பார்த்தான்.

டீச்சர் வேகமாக நடந்து வகுப்புக்குள் சென்று நாற்காலியில் அமர்ந்துகொண்டார்.டீச்சருக்குப் பின்னால் வந்த ராஜேஷ்குமார் என்ன செய்வது என்று தெரியாமல் தன்னுடைய இடத்தில் அமர்ந்தான்.பிள்ளைகள் அனைவரும் அவனையும் கல்லையும் மாறி மாறிப் பார்த்தார்கள். பேச்சு சத்தம் குறையாமல் கூடிக்கொண்டு போனது.டீச்சர் பிரம்பை எடுத்து ‘அமைதியா இருங்க’ என்று மேஜையில் தட்டாமல் இருப்பது பிள்ளைகளுக்கு ஆச்சரியத்தைத் தந்தது.

டீச்சர் கண்களைத் தன்னுடைய கைக்குட்டையால் துடைத்துக்கொண்டு ராஜேஷைப் பார்த்தார். “உங்க அப்பாவ மதியம் ஸ்கூலுக்குக் கூட்டிட்டு வா” என்று சொன்னார். “சரிங்க டீச்சர்” என்று அவன் சொன்னான்.அதற்குப்

பிறகு டீச்சர் பாடம் நடத்தாமல் அமர்ந்திருந்தார். நாற்காலியிலிருந்து எழுந்து வகுப்பிற்கு வெளியே செல்வதும் திரும்பி வந்து நாற்காலியில் அமர்வதுமாக இருந்தார். சத்தமாகப் பேசிய பிள்ளைகளைக்கூடத் திட்டவில்லை.

டீச்சர், ராஜேஷ்குமார் வைத்திருந்த கல்லைப் பார்ப்பதும் கண்களைத் துடைத்துக் கொள்வதுமாக இருந்தார். இன்னொரு முறை அக்கல்லை வெயிலில் வைத்துத் தன்னுடைய முகத்தைப் பார்க்க ஆசைப்பட்டார். ஆனால் டீச்சருக்கு மனதில்லை. அக்கல்லில் தன்னுடைய முகம் தெரியாது என்பது அவருக்குத் தெரியும்.அந்தக் கல்லைப் பார்த்ததன் மூலமாக தன்னுடைய வாழ்வின் கஷ்டங்கள் நீங்கிவிடுமென்று நினைத்தார். அந்த வட்டக் கல்லைப் பார்த்ததும் தன்னுடைய திருமண நாளில் நடந்த நிகழ்ச்சிகள் அவருக்கு நினைவுக்கு வந்தன.

இதேமாதிரியான வட்டமான கறுப்பு நிறக் கல்லை சாமியார் ஒருவர் டீச்சரின் திருமணத்தின் போது பரிசாக அவரது கணவருக்குக் கொடுத்தார். அதில் கணவருடைய முகம் தெரிந்தது. ஆனால் டீச்சரின் முகம் தெரியவில்லை. அந்தக் கல்லை இரவு முழுவதும் வைத்துக்கொண்டு கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தவர் அதிகாலை யாரிடமும் சொல்லாமல் வீட்டைத் திறந்து போட்டுவிட்டுச் சென்றார். எங்கு சென்றார் என்று இப்போதுவரை தெரியவில்லை. டீச்சருக்குத் தன் கணவரை நினைக்கவும் அடிவயிற்றிலிருந்து எழும் வலி நெஞ்சைச் கவ்விக்கொள்ளும். அழுகை வந்துவிடும். ஆனால் அந்தக் கல்லை இப்போது பார்த்ததும் தன்னுடைய வாழ்க்கையை விட்டுச் சென்ற சந்தோஷங்கள் யாவும் இனி தன்னைத் தேடி வந்தடையும் என்று நம்பினார். அந்த நம்பிக்கை டீச்சரை அலைவுறச் செய்தது. அங்குமிங்குமாக நடந்தார்.

டீச்சர் மதிய உணவு முடிந்து சீக்கிரமாகவே பள்ளிக்கூடத்திற்கு வந்துவிட்டார். வகுப்புக்குள் உட்காராமல் வாசலில் நின்றார். வழக்கமாக டீச்சர் வீட்டிற்குச் சென்று மதியம் சாப்பிட்டு விட்டு, திரும்பவும் பள்ளிக்கூடத்திற்கு வரும் போது தலை சீவியிருப்பார். பவுடர் அடித்து பொட்டு வைத்திருப்பார். காலையில் வைத்த பூ, சற்று முன்பாகப் பறித்துத் தொடுத்துத் தலையில் சூடியதுமாதிரி அழகாக இருக்கும்.உதிர்ந்திருக்காது. மலர்வதற்கு நேரம் பார்த்துக் காத்திருக்கும். கடைசி மணியடித்ததும் டீச்சர் பிள்ளைகளைப் பார்த்து, “சரி, போய்ட்டு வாங்க. நாளைக்குப் பாப்போம்” என்றதும் தலையில் சூடிய பூக்கள் அதுதான் சமயம் என்று மலரத்தொடங்கும். ஜம்மென்று வாசனை வரும்.ஆனால் இப்போது அதெல்லாம் இல்லை. டீச்சர் வெறும் தலையோடு வந்திருப்பதைப் பார்த்த அம்பிகா, பாண்டியம்மாளிடம்

“டீச்சருக்கு உடம்புக்கு நல்லால்ல. அதான் மேக்கப் இல்லாம வந்திருக்காங்க” என்று சொன்னாள்.

அதைக் கேட்ட தேவகி, “ஆமா, இவ பக்கத்துல நின்னு பாத்துட்டு வந்தது கணக்கா பேசுவா” என்று மும்தாஜ்பேகத்திடம் சொன்னாள்.தேவகிக்கும் டீச்சரைப் பார்க்க கஷ்டமாக இருந்தது. அவள் டீச்சரை இப்படிப் பார்த்ததில்லை. அவளுக்கு அழுகை வந்தது.அவள் பச்சைப் பாவாடையால் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

வகுப்பிலிருந்த பிள்ளைகள் அனைவரும் டீச்சரைப் பார்த்தனர். “டீச்சர் எவ்வளவு அழகா வருவாங்க. இன்னைக்கு எதுக்கு இப்படி வந்திருக்காங்க. பாக்க நல்லால்ல. பாவமாயிருக்குது” என்று மும்தாஜ்பேகம் சொன்னாள். அவள் சொல்வது உண்மைதான் என்று தேவகிக்குத் தோன்றியது. டீச்சர் பாவம்தான்.

ராஜேஷ்குமாரின் அப்பா அவனை சைக்கிளின் பின்கேரியரில் உட்கார வைத்து வேகமாக ஓட்டிக்கொண்டு வந்தார். பள்ளிக்கூடத்தின் முன்பாக சைக்கிளை நிறுத்திப் பூட்டுப் போட்டுவிட்டு வகுப்புக்கு அவனை அழைத்துக் கொண்டு வந்தார். வகுப்புக்கு முன்பாக நின்றிருந்த டீச்சரைப் பார்த்ததும் அவர் தூக்கிக் கட்டியிருந்த வேட்டியைக் கீழே இறக்கிவிட்டார்.

டீச்சர் பரபரப்புடன் அவரிடம், “இந்தக் கல்லை யார்கிட்ட இருந்து நீங்க வாங்கினீங்க” என்று கேட்டார்.

ராஜேஷ்குமாரின் அப்பா, “சாமியாரு கொடுத்தாரு டீச்சர்” என்று குழப்பத்துடன் சொன்னார். வெறும் கல்தான். டீச்சர் எதற்காக இவ்வளவு பரபரப்பாக இருக்கிறார்.பளபளப்பான அந்தக் கல்லில் முகம் தெரிவது பெரிய விஷயமா என்று நினைத்தார்.

“சாமியாரா?”

“ஆமாம் டீச்சர். சாமியார்தான் எனக்குக் கொடுத்தாரு.”

“நல்லா யோசிச்சுச் சொல்லுங்க. சாமியாரு கொடுத்தாரா? இல்ல, கல்லைக் கொடுத்தவரு பக்கத்தில சாமியாரு நின்னுட்டிருந்தாரா?”

“டீச்சர், எனக்கு நல்லா ஞாபகத்தில இருக்கு. இந்தக் கல்லைக் கொடுத்தது சாமியார்தான்.”

“சாமியார் பாக்குறதுக்கு எப்படி இருந்தாரு. அவரு முகம் உங்களுக்கு ஞாபகத்தில இருக்கா?”

“தாடி வெச்ச சாமியாரு. நாங்க வடக்க ஈயப்பாத்திரம் மொத்தமா ஆர்டர் கொடுக்கப் போவோம். அப்ப காசிக்குப் போயிருந்தோம்.அங்க அவரைப் பாத்தேன். நாங்க தமிழ் பேசிட்டு இருந்தோம். அவரா எங்க பக்கத்தில வந்து, எந்த ஊரில இருந்து வர்றீங்கன்னு கேட்டாரு. நம்மூர் பேரைக் கேட்டதும் அவரு பையில வெச்சிருந்த இந்த வட்டக் கல்லை எடுத்துக் கொடுத்துட்டாரு” என்று சொன்னார்.

டீச்சர் தன் கைப்பையில் இருந்த புகைப்படத்தை எடுத்து அவரிடம் காட்டி, “அந்த சாமியாரு இவரு மாதிரி இருந்தாரா” என்று கோபமாகக் கேட்டார். அப்போது அவர் கண்கள் சிவந்திருந்தன. கண்ணீர்த்துளிகள் நின்றன. டீச்சரின் கோபத்தைப் பார்த்து, கீழே விழுவதற்குத் தயங்கி நிற்பதுபோல் நின்றன.

“ஆமா டீச்சர்” என்று சொன்னார் ராஜேஷ்குமாரின் அப்பா. அதைக் கேட்டதும் டீச்சர் கோபமாக அப்புகைப்படத்தைக் கிழித்து குப்பைத் தொட்டியில் போட்டார். “ராஸ்கல். அயோக்கியன்” என்று முனங்கியவர் மேற்கொண்டு பேசுவதற்குத் தன் வாழ்க்கையில் ஒன்றுமில்லை என்று வேகமாக நடந்தார்.

“எதுக்கு டீச்சர் கேட்டீங்க” என்று ராஜேஷ்குமாரின் அப்பா கேட்டதற்கு டீச்சர் பதில் சொல்லவில்லை. அவருடைய முகத்தை நிமிர்ந்து பார்க்கவுமில்லை. குனிந்த தலையோடு வகுப்புக்குள் மெதுவாக நடந்து சென்று நாற்காலியில் அமர்ந்துகொண்டார். பக்கத்து வகுப்பு டீச்சர் வந்து அவருடைய தோளைத் தொட்டு, “அழாதீங்க டீச்சர், அழாதீங்க டீச்சர்” என்று சொன்னார். அந்த டீச்சர் சொன்னவுடன் மேலும் அழுகை கூடி ஹோவென அழத்தொடங்கினார்.

“பிள்ளைகள் முன்னால அழாதீங்க டீச்சர். என்னைக்கிருந்தாலும் திரும்பவும் வந்துருவாங்க டீச்சர். கவலைப்படாம இருங்க டீச்சர்” என்று பக்கத்து வகுப்பு டீச்சர் சொன்னார். அவருக்கும் அழுகை முட்டிக்கொண்டு வந்தது. வகுப்பில் அழக்கூடாது என்று தன்னுடைய கண்களைத் துடைத்துக்கொண்டார்.

டீச்சர், “நானும் அந்தாளு மாதிரி எங்காச்சு ஓடிப்போயிருக்கணும் டீச்சர். இல்ல எங்க வீட்லயாச்சும் தொலைஞ்சுபோகட்டுமுன்னு வேற ஒருத்தரப் பாத்து...” என்று முழுசாகச் சொல்லி முடிக்காமல் அழத் தொடங்கினார்.

பக்கத்து வகுப்பு டீச்சருக்குத் தாங்க முடியவில்லை.டீச்சரைக் கட்டிக்கொண்டு அழத் தொடங்கினாள்.

பிள்ளைகளுக்கு என்ன நடக்கிறது என்று எதுவும் புரியவில்லை. ஆனால் ராஜேஷ்குமாரின் மேல் கோபமாக இருந்தார்கள். அவனால்தான் டீச்சர் அழுகிறார் என்று அவனைத் திட்டினார்கள். பாண்டியம்மா `வெளியில வாடீ, உன்னய என்னா செய்யுறேன்னு பாரு' என்று நாக்கைத் துருத்தி அரட்டினாள்.

“இந்தக் கல்லை எதுக்குப் பள்ளிக்கூடத்துக்குக் கொண்டு வந்தான். பேசாம அவுங்க வீட்டில வெச்சுத் தொலைக்க வேண்டியதுதான.”

“டீச்சர் நம்மளயெல்லாம் திட்டிட்டு இருந்தாலும் பாக்குறதுக்கு எவ்வளவு அழகா இருப்பாங்கன்னு தெரியுமா. இன்னைக்கு அவங்க முகம் சரியில்ல” என்று பிள்ளைகள் பேசிக்கொண்டதை ராஜேஷ்குமாரின் அப்பா கேட்டார். அவருக்கும் எதுவும் புரியவில்லை.

ராஜேஷ்குமாரின் அப்பா வேகமாக வகுப்பறையை விட்டு வெளியே நடந்தார். அவரால் அங்கிருக்க முடியவில்லை. அவருடைய கண்கள் கலங்கியிருந்தன. சைக்கிளின் அருகே நின்றபோது ராஜேஷ்குமார் ‘அப்பா... அப்பா...’ என்று தன்னை அழைப்பது கேட்டுத் திரும்பிப் பார்த்தார். அவன் வேகமாக ஓடி வருவது தெரிந்தது. அவன் கையில் உருண்டைக் கல் இருந்தது. “இந்தக் கல்லு நமக்கு வேண்டாம். எங்காச்சு தூக்கிப் போட்டுருங்க” என்று அவருடைய கையில் கொடுத்துவிட்டு வகுப்பிற்குச் சென்றான். ராஜேஷ்குமாரின் அப்பா அந்தக் கல்லைப் பார்த்தார். அந்தக் கல்லில் புகைப்படத்தில் டீச்சர் காட்டியவரின் முகம் தெரிந்தது.